மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை

கிருஷ்ணகிரி மாவட்டம்

முன்னிலை : திரு.சி. ராஜசேகர்.,பி.ஏ.,பீ.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி

2018-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18- ஆம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.58/2018

---------

கே. சென்னையன், த/பெ. கிருஷ்ணன், வயது சுமார் 65, வசிப்பிடம் ஏ-ரெட்டிப்பட்டி கிராமம், ஆனந்துார் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். .. வாதி

//எதிராக//

சிவராஜ், த/பெ. சின்னதம்பி மூப்பர், வயது சுமார் 48, வசிப்பிடம் திருவணப்பட்டி அஞ்சல் மற்றும் கிராமம், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

.. பிரதிவாதி

வழக்கு தேதி:17.07.2018 வழக்கின் மதிப்பு ரூ.74,400/-

வழக்கு மூலம்: 20.06.2016 முதல் 17.02.2018. நீதிமன்ற கட்டணம் ரூ.2233/-

U/S. 22 of TNCF Act.

தாவா புரோநோட்டு தொகை ரூ.60,000/- மற்றும் பின் வட்டி மற்றும் நீதிமன்ற செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 12.12.2018 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.எம்.முருகேசன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் திரு.எம். மாதேஸ்வரன், அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு ஒருதலைப்பட்ச உத்தரவிடப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில்

என் ஆய்வில் இருந்ததுமான இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்:

**<u>தீர்ப்பாணை</u>**

1. தாவா பிரதிவாதி, வாதிக்கு தாவா தொகையான ரூபாய். ரூ.74,400/-ஐ செலுத்தவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

2. தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து, தீர்ப்பாணை தேதி வரை ரூபாய்.60,000/-க்கு, 9 சதவிகித வட்டியுடனும், தீர்ப்பாணை நாளிலிருந்து வசூலாகும் நாள் வரை 6 சதவிகித வட்டியுடன் பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

3. வாதிக்கு, பிரதிவாதி தாவா வழக்கு செலவுத்தொகையாக ரூ.3762/-ஐ செலுத்தவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

**<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>**

| | | வாதி தரப்பு |
|---|---|---|
| பிராது ஸ்டாம்பு | .. | 2233.00 |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | .. | 10.00 |
| வக்கீல் பீஸ் | .. | 1519.00 |
| | | ------------------ |
| மொத்தம் | | 3762.00 |
| | | ------------------- |

செலவுத்தொகைப் பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

இன்று 2018-ஆம் டிசம்பர் மாதம் 18-ஆம் நாள் செவ்வாய்கிழமை என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஊத்தங்கரை.**